| | | |
|---|---|---|
| வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம் | | |
| இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018 | | |
| தரம் - 7 | விஞ்ஞானம் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

சுட்டெண் :- ......................................

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பூக்களை தோற்றுவிக்காத தாவரம் எது?
 1) தென்னை 2) மடுப்பனை 3) காசித்தும்பை 4) பயற்றை

02. நாருருவேர்த்தொகுதியைக் கொண்ட தாவரமொன்று கொண்டுள்ள சிறப்பியல்பாக காணப்படக்கூடியது.
 1) கிளைகளைக் கொண்டிருக்கும்.
 2) இரு வித்திலைகளைக் கொண்ட வித்து காணப்படுதல்
 3) இலைகள் சமாந்தர நரம்பமைப்பைக் கொண்டது
 4) ஐந்து அல்லிகளையுடைய பூக்கள் தோன்றுதல்.

03. இரு தளவாடிகள் ஒன்றுக்கொன்று சாய்வாக வைத்து அதன் மத்தியில் பொருள் ஒன்று வைக்கப்பட்ட போது 5 விம்பங்கள் தென்பட்டது எனின் ஆடிகள் என்ன கோணத்தில் வைக்கப்பட்டுள்ளது.
 1) $60^\circ$ 2) $45^\circ$ 3) $90^\circ$ 4) $30^\circ$

04. சந்திரகணம் தோன்றுதல் தொடர்பான கூற்றுக்களில் சரியானது.
 1) அமாவாசை தினத்தில் சந்திரனின் நிழல் புவியின் மீது விழும்
 2) பூரணை தினத்தில் சந்திரனின் நிழல் புவியின் மீது விழும்
 3) அமாவாசை தினத்தில் புவியின் நிழல் சந்திரன் மீது விழும்
 4) பூரணை தினத்தில் புவியின் நிழல் சந்திரன் மீது விழும்.

05. பொருளொன்றை நுணுக்குக்காட்டியில் வைத்து அவதானிக்கும் பொழுது
 1) ஒரு கண்ணை மூடி மற்றைய கண்ணை திறந்து அவதானித்தல்
 2) இரண்டு கண்களையும் திறந்து அவதானித்தல்
 3) வலது கண்ணை மூடி இடது கண்ணால் அவதானித்தல்
 4) இடது கண்ணை மூடி வலது கண்ணால் அவதானித்தல்

06. இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடாக மட்டும் அவதானிக்கக்கூடிய நுண்ணங்கி பிரிவு / பிரிவுகள்
 1) வைரசு 2) பற்றீரியா 3) பங்கசு 4) மேற்கூறிய யாவும்

07. குறித்த ஒரு தொழிலை ஆற்றுவதற்காக ஒன்று சேர்ந்து உருவான கலக்கூட்டத்தின் ஒழுங்கமைப்பு மட்டம்
 1) தொகுதி 2) அங்கம் 3) இழையம் 4) அங்கி

08. தாவரங்களில் உணவைக் கடத்தும் இழையம்

1) காழ் இழையம் 2) உரிய இழையம் 3) தசை இழையம் 4) நரம்பு இழையம்

09. கண்ணாடிக்கோலை பட்டினால் உரோஞ்சும் போது

1) கண்ணாடிக்கோல் நேர் ஏற்றத்தையும் பட்டு மறை ஏற்றத்தையும் பெறும்
2) கண்ணாடிக்கோல் மறை ஏற்றத்தையும் பட்டு நேர் ஏற்றத்தையும் பெறும்
3) கண்ணாடிக்கோல் நேர் ஏற்றத்தையும் பட்டு நேர் ஏற்றத்தையும் பெறும்
4) கண்ணாடிக்கோல் மறை ஏற்றத்தையும் பட்டு மறை ஏற்றத்தையும் பெறும்.

10. பின்வருவனவற்றுள் எக்கூட்டத்தில் ஒரே வகையைச் சேர்ந்த இசைக்கருவிகள் அடங்கியுள்ளன.

1) வயலின், மேளம், வீணை 2) மேளம், மிருதங்கம், புல்லாங்குழல்
3) மேளம், வயலின், புல்லாங்குழல் 4) வயலின், வீணை, தம்புரா

11. பின்வருவனவற்றுள் எது தவறானது

1) பொருள்கள் அதிர்வதன் மூலமே ஒலி பிறப்பிக்கப்படுகின்றது.
2) ஒலி ஊடுகடத்தப்படுவதற்கு ஊடகம் அவசியம்
3) ஒளியின் வேகம் ஒலியின் வேகத்தை விட குறைவானது
4) திரவ, வாயு ஊடகங்களை விட திண்ம ஊடகத்தில் ஒலியின் கதி அதிகமாகும்

12. உயரத்தேயுள்ள தாங்கியில் உள்ள நீரில் அடங்கியுள்ள சக்தி

1) அழுத்தசக்தி 2) இயக்கசக்தி 3) காந்தசக்தி 4) இரசாயனசக்தி


13. மீன்கள் ஒட்சிசனை எதன் மூலம் உள்ளெடுக்கின்றது.

1) வாய்க்குழி 2) தோல் 3) பூ 4) சுவாசப்பை

14. மெதயில் செம்மஞ்சளுக்கு மஞ்சள் நிறத்தை கொடுப்பது

1) உப்பு 2) சீனிக்கரைசல்
3) சோடியம் ஐதரொட்சைட்டு 4) ஐதரோகுளோரிக்கமிலம்

15. முள்ளந்தண்டுளிகள் மட்டும் அடங்கிய கூட்டத்தை தெரிவு செய்க.



(a) (b) (c) (d)

1) a, b, c, d 2) a, b, d 3) a, b, c 4) a, c, d

16. திண்ம திரவப்பாறைகளைக் கொண்ட புவியின் பகுதி

1) அகணி 2) மென்மூடி 3) புவியோடு 4) கடல்

17. பின்வருவனவற்றுள் எதில் இருந்து மின்னை உற்பத்தி செய்ய முடியாது?

1) அம்பியர்மானி 2) தைனமோ 3) உலர்மின்கலம் 4) சூரியகலம்

18. பொய்க்கோலம் பூணும் ஆற்றலற்ற விலங்கு
1) பச்சைவிரியன் 2) அந்துப்பூச்சி 3) நாகம் 4) தத்துவெட்டி


19. 
பரம்பலடைய உதவும் காரணி
1) காற்று 2) நீர் 3) விலங்கு 4) அதிர்ந்து வெடித்தல்

20. உலக சுற்றுச்சூழல் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது
1) ஏப்பிரல் 22 2) மார்ச் 22 3) யூன் 5 4) யூலை 5


(20X2=40புள்ளிகள்)

## பகுதி – II

01. தரம் 7 மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.




அமைப்பு A



அமைப்பு B

Education கல்வி අධ්‍යාපන

i) அமைப்பு A ஒழுங்கு செய்ததன் நோக்கம் யாது?
........................................................................................ (1 புள்ளி)

ii) மணிச்சாடியிலுள்ள மின்மணியை மின்கலங்களுடனும் மூடிய நிலையில் உள்ள ஆளியுடனும் இணைத்த போது நீர் பெற்ற அவதானம் யாது?
........................................................................................ (2 புள்ளிகள்)

iii) மின்மணி ஒலிக்கும் போது நிகழும் சக்தி நிலைமாற்றத்தை எழுதுக.
........................................................................................ (1 புள்ளி)

iv) மணிச்சாடியிலுள்ள வளியை முழுமையாக அகற்றும் போது உமது அவதானம் யாது?
........................................................................................ (1 புள்ளி)

v) விண்கலத்தில் பயணம் செய்யும் விண்வெளி வீரர்களின் கதைக்கும் சத்தம் ஒருவருக்கு ஒருவர் கேட்க முடியாமைக்கான காரணம் யாது?
........................................................................................(2 புள்ளிகள்)

vi) அமைப்பு B ஒழுங்கு செய்ததன் நோக்கம் யாது?
........................................................................................ (1 புள்ளி)

vii) கடிகாரத்தின் டிக்டிக் ஒலி வளியில் கேட்பதை விட மேசையில் காதை வைத்துக்கேட்கும் போது அதிகமாக கேட்பதன் காரணம் யாது?
........................................................................................ (2 புள்ளிகள்)

viii) டொல்பின்கள் நீரினுள்ளே ஒலி எழுப்பும் போது மிக உயர்ந்த தொனியையும் நீருக்கு வெளியே வந்து ஒலி எழுப்பும் போது மிகவும் தாழ்ந்த தொனியையும் கேட்கக்கூடியதாக இருப்பதன் காரணம் யாது?

……………………………………………………………………………… (2 புள்ளிகள்)

ix) ஒலி செல்லும் கதியை திண்ம, திரவ, வாயு ஊடகங்களின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.


……………………………………………………………………………… (2 புள்ளிகள்)

x) நோயாளிகளைப் பரீட்சிக்க வைத்தியர்கள் பயன்படுத்தும் ஒலியை அடிப்படையாகக் கொண்ட உபகரணம் யாது?

……………………………………………………………………………… (1 புள்ளி)

15

**02. அங்கத்தொகுதிகள் ஒன்று சேர்ந்து மனித உடலை ஆக்கும் விதம் கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.**




i) படத்தில் காணப்படுகின்ற தொகுதிகளைப் உருவில் பெயரிடுக.

(3½ புள்ளிகள்)

ii) தொகுதி 3 இனால் ஆற்றப்படும் தொழில்கள் இரண்டு தருக.

.................................................................................................................................

................................................................................................................................. (2 புள்ளிகள்)

iii) தொகுதி 2 இற்கும் தொகுதி 3 இற்கும் பொதுவான பகுதி (பாதை) எது?

................................................................................................................................. (1 புள்ளி)

iv) மனிதனில் வாயுப்பரிமாற்றம் நடைபெறும் தொகுதி எது?

................................................................................................................................. (1 புள்ளி)

v) தொகுதி 2 இனூடாக வளி செல்லும் பாதையைக் குறிக்கும் பாய்ச்சல் கோட்டு படத்தை பூரணப்படுத்துக.

மூக்குக்குழி → ........................ → ........................

↓


........................ ← ........................

↓

சுவாசப்பை சிற்றறை

(2 புள்ளிகள்)

vi) சுவாசப்பொறிமுறையைக் காட்டும் மாதிரி அமைப்பில் ஆங்கில எழுத்துக்கள் குறிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒப்பான மனித சுவாசத்தொகுதியின் பகுதிகளை இனங்கண்டு தொடர்புபடுத்துக.

| சுவாசப்பொறிமுறையை காட்டுவதற்கான மாதிரி அமைப்பு | மனித சுவாசத் தொகுதியின் பகுதிகள் |
|---|---|
|  | 1) பிரிமென்றகடு<br>2) நெஞ்சறைக்கூடு<br>3) வாதனாளி<br>4) சுவாசப்பை<br>5) சுவாசப்பைக்குழாய் |

(2 ½ புள்ளிகள்)

vii) E ஆனது கீழ்நோக்கி இழுக்கப்படும் போது D யில் நடைபெறும் மாற்றம் யாது?

................................................................................................................................. (1 புள்ளி)

viii) இது எச்செயன்முறைக்கு ஒத்ததாக காணப்படுகின்றது?

................................................................................................................................. (1 புள்ளி)


ix) பகுதி B ஆனது நெஞ்சறைக்கூட்டிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது.

................................................................................................................................. (1 புள்ளி)

15

**03.**

A. தரம் 7 மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்பட்ட ஒளியியல் உபகரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




கீழே தரப்பட்ட ஒவ்வொரு விவரத்திற்கும் பொருத்தமான ஒளியியல் உபகரணங்களை இனம் காண்க. அவ் ஒளியியல் உபகரணங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்தினை எதிரே உள்ள கூட்டினுள் எழுதுக.

i) சூரிய அடுப்பில் ஒளிக்கதிரை குறித்த ஓர் இடத்தில் குவிக்கப் பயன்படுவது ☐

ii) தற்போது சந்தியைக்கடக்க முற்படும் வாகனங்களுக்கு தொலைவில் வருவனவற்றைக் காட்ட பயன்படுவது. ☐

iii) பல்வைத்தியர்கள் பற்களை சோதிப்பதற்கு பயன்படுவது ☐

iv) வாகனங்களின் பக்கக்கண்ணாடியாக பயன்படுவது ☐

v) நுணுக்குக்காட்டிகளில் ஒளியை ஒரு முகப்படுத்துவது ☐

vi) நீர் மூழ்கிக்கப்பல்களில் பயன்படுத்தப்படுவது ☐

vii) பக்க நேர்மாற்று விம்பத்தை கொடுப்பது ☐


viii) மூன்று தளவாடிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட கருவி ☐

ix) எளிய நுணுக்குக்காட்டியில் காணப்படுவது ☐


x) ஓர் பொருள் பல பொருட்கள் போல் தோன்றும் கருவி ☐

(10X ½ = 5 புள்ளிகள்)

B.




A



B

i) மேலே காட்டப்பட்டுள்ள நுணுக்குக்காட்டிகளை இனம் காண்க.

A ..................................  B ..................................

(2 புள்ளிகள்)

ii) A இற்கும் B இற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

| | நுணுக்குக்காட்டி A | நுணுக்குக்காட்டி B |
|---|---|---|
| 1. | ............................................ | ............................................ |
| 2. | ............................................ | ............................................ |

(2 புள்ளிகள்)

iii) A யிலுள்ள பகுதிகளைப் பெயரிடுக.


1) ............................................................................
2) ............................................................................
3) ............................................................................
4) ............................................................................
5) ............................................................................ (5 புள்ளிகள்)

iv) பொருளுக்கு வரும் ஒளியின் அளவை கட்டுப்படுத்தும் - பகுதி எது?

................................................................................................................ (1 புள்ளி)

15

04. புவியின் மேற்பரப்பிலிருந்து அதன் உட்பகுதியை நோக்கிச் செல்லும் போது தோன்றும் பிரதேசங்கள் கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




i) மேலேயுள்ள படத்தில் உள்ள பிரதேசங்களை பெயரிடுக.

A ............................................ B ............................................
C ............................................ D ............................................

(2 புள்ளிகள்)

ii) புவியில் சகல அங்கிகளும் வாழும் பகுதி எது?

................................................................................................................ (1 புள்ளி)

iii) எமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக பிரதேசம் A யிலிருந்து பெற்றுக்கொள்ளும் பதார்த்தங்கள் இரண்டு எழுதுக.

................................................................................................................ (2 புள்ளிகள்)

iv) புவியியலாளர்கள் புவியின் உட்பகுதியின் தன்மை தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் உபாயம் ஒன்றைக் குறிப்பிடுக.

................................................................................................................ (2 புள்ளிகள்)

v) புவியின் அகக்கட்டமைப்பைக் காட்டும் முப்பரிமாண மாதிரி ஒன்றை அமைப்பதற்கு நீர் வகுப்பறையில் பயன்படுத்திய பொருள் யாது?

........................................................................................ (1 புள்ளி)

vi) எப்பிரதேசத்தில் புவித்தட்டுக்கள் அமைந்துள்ளன?

........................................................................................ (1 புள்ளி)

vii) புவித்தட்டசைவினை வரைந்து காட்டுக.

| A | B |
|---|---|
|  |  |

(2 புள்ளிகள்)

viii) இப்புவித்தட்டசைவினால் தோன்றும் நிகழ்வு யாது?

........................................................................................ (1 புள்ளி)

ix) புவித்தட்டசைவு சமுத்திரத்தின் அடியில் நிகழும் போது நடைபெறும் நிகழ்வின் சிறப்பு பெயர் யாது?

........................................................................................ (1 புள்ளி)

x) இந்நிகழ்வின் போது எடுக்க வேண்டிய முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் இரண்டு தருக.

1) ........................................................................................

2) ........................................................................................ (2 புள்ளிகள்)

15

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457